RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s511

# திராவிடக் கருத்தியல் கண்ணோட்டப் பார்வையில் அழ. வள்ளியப்பா பாடல்கள்

தெ. மோகனாம்பாள் [அ, *], அ. மோகன்ராஜ் [அ]

[அ] தமிழ்த்துறை, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு-638052, தமிழ்நாடு, இந்தியா

# Azha. Valliyappa's Songs in the Point of View of Dravidian Ideology

D. Mohanambal [a, *], A. Mohanraj [a]

[a] Department of Tamil, Nandha Arts and Science College, Erode-638052, Tamil Nadu, India

* Corresponding Author: mona71177@gmail.com

Received: 18-08-2021
Revised: 15-04-2022
Accepted: 15-04-2022
Published: 04-07-2022

**ABSTRACT**

Childhood is the foundation of everyone's life. It is quite necessary that children are guided properly in this phase. The thoughts sown in the minds of children help them to lead their life in a great way. So, these good thoughts should be taught to them through subject matters that interest them. Children's Literature does the exact same thing. Children's songs that are composed with simplicity and musicality attract them and amuse them greatly. Children's Poet Azha. Valliyappa has contributed many poems, short stories, dramas and novels to Children's Literature. Children are his exclusive audience. Writing for children is an art. Whatever a child listens to, reads and writes are registered in her mind and it has a long-lasting impression because there are no worries for children. Their minds are as fresh as a clean slate and whatever is written on it is well learnt by them. What they learn help them grow into matured people. A sword meant for warfare can't be used to sharpen a pencil. Similarly, any advice that is forcefully instructed to anyone can never bring fruitful results. Azha. Valliyappa has clearly understood it and he has given children many rational thoughts in a language that can be easily understood by them.

**Keywords:** Children's Literature, Azha. Valliyappa, Tamil Poet, Childhood

## முன்னுரை

மனித வாழ்க்கையின் அடித்தளமாய் அமையும் பருவம் குழந்தைப் பருவமாகும். அவர்களை நன்முறையில் பாதுகாத்து நெறிப்படுத்துவதும் இப்பருவத்தில் அவசியமானதாகின்றது. சிறுவயதில் விதைக்கப்படும் நல்லெண்ணங்களே எதிர்கால வாழ்வினை நன்முறையில் அமைத்திட வழி செய்கின்றது. எனவே அவர்கள் விரும்பும் வண்ணம் பாடுபொருளாய் அமையும் பொருள்களின் வழி நன்னெறி செலுத்திடல் வேண்டும். அவ்வகையில் சிறுவர்களை நல்வழிப்படுத்துவதாய் அமைவது குழந்தை இலக்கியமாகும்.

"குழந்தைகளுக்காகப் பாடல் எழுதுகிறவர்கள் குழந்தைகளோடு குழந்தைகளாய் ஆக வேண்டும் அவர்களது களங்கமற்ற இதயத்தைத் தாமும் பெற வேண்டும். குழந்தைகளுக்காகப் பாடல் இயற்றுபவர்கள் பெற வேண்டிய மனநிலையை மேற்காண் வரிகள் மூலம் கவிஞர் பெருமாள் அவர்கள் எடுத்தியம்பியுள்ளார் (Perumal, 1972). எளிமை என்னும் பணபோடு இனிமை என்னும் பண்பும் சேர்ந்து

குழந்தைகளுக்காகப் பாடல் இயற்றும் போது அவை குழந்தைகளின் நெஞ்சங்களைப் பிணைத்து இன்புறுத்தும் பாடல்களாக அமைந்து விடுகின்றன.

குழந்தை இலக்கியத்திற்குக் கவிதை, சிறுகதை, நாடகம், நாவல் எனப் பல வகையினும் நூல்களை இயற்றியளித்துப் பெருமை பெற்றவர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள். இவரது படைப்புலக நிலைப்பாட்டில் சிறுவர்களே முன்னிற்கின்றனர். குழந்தைகளுக்கு எழுதுவது என்பது ஒரு தனிப்பட்டக் கலையாகும். குழந்தைப் பருவத்தில் ஒரு குழந்தை கேட்பதும், படிப்பதும், எழுதுவதும் அதன் மனதில் ஆழப் பதிந்துவிடுகிறது. ஏனெனில் குழந்தைக்கு அந்தப் பருவத்தில் வேறு எவ்விதக் கவலையும் இல்லை. நன்கு துடைத்து வைக்கப்பட்டக் கரும்பலகை போல உள்ளது. அதில் எழுதப்படுவது பளிச்செனத் தெரிவது போல ஆரம்ப நிலையில் குழந்தை அறிந்து கொள்ளும் விஷயங்கள் அதன் மனதில் ஆழப் பதிகின்றன. குழந்தை வளர்ந்து பெரியவனாக அவைதாம் உறுதுணையாக நிற்கின்றன.

போர் புரிய உதவும் வாளானது எழுதுகோலைச் சீவிக் கூர்மையாக்கப் பயன்படாது. அதுபோல கட்டாயமாகத் திணிக்கப்படும் எந்த ஒரு செயலும் சிறப்பினை நல்கிடாது என்பதனை நன்கு உணர்ந்து வளரும் மழலைகளுக்காக அவர்களுக்குப் புரியும் மொழியிலேயே பல நல்ல பகுத்தறிவு சிந்தனைகளைக் கொடுத்து அதனைத் தம் பாடலில் பதிவு செய்துள்ளார் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள்.

## கல்வியின் சிறப்பு

சமூக வளர்ச்சிக்குக் கல்வியே மிகச் சிறந்த கருவியாகும். இளம் வயதில் கற்பிக்கப்படும் கல்வியானது குழந்தைகளிடம் நல்லொழுக்கத்தை ஏற்படுத்துவதோடு தற்சிந்தனை ஆற்றலையும், தன்னம்பிக்கையையும் வளர்க்கும். உரிய வயதில் கற்க வேண்டிய கல்வியைக் கற்கவில்லையானால் வருங்காலங்களில் எத்தகைய இன்னல்களையும் எதிர்கொள்ள வேண்டி வரும். எனவே கல்வியின் இன்றியமையாமையைக் குழந்தைகளுக்கு உணர்த்த வேண்டியது அவசியமாகும். அதனால் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களும்,

“பாடம் படியா ஒரு பையன்

பள்ளி செல்லா ஒரு பையன்

மூடன் ஆனான் முன்னாலே

மூட்டை சுமந்தான் பின்னாலே”

என்று கல்வியின் அவசியத்தை மிகவும் அற்புதமாக விளக்குகிறார் (Valliappa, 2010). கல்விதான் உயர்ந்தோர் தாழ்ந்தோர் இனப்பாகுபாடு இல்லாமல் அனைவரும் சமம் என்ற கருத்தினை முன் வைப்பதாகும் தற்காலத்தில் கல்விக்கு முதன்மை இடம் கொடுப்பது போன்று குழந்தைப் பாடல்களிலும் கவிஞர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். முறையான கல்வியே சிறந்த மனிதனையும் சமுதாயத்தையும் உருவாக்க உதவும் கருவியாகும். நூல்கள் என்பன அறிவுப் பெட்டகங்கள் அதனால் நல்ல நூல்களைப் படித்தால் வளமான அறிவைத் தரும். ஒன்றை வைத்து ஒன்றை விளங்கும் நுண்ணறிவான பகுத்தறிவை ஏற்படுத்தும். வள்ளுவப் பெருந்தகையும்,

“எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு”

என்ற குறளின் வாயிலாக யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்பினும் அப்பொருளின் உண்மையான கருத்தைக் காணவல்லது அறிவு (Parimelalhagar, 2002). அந்த அறிவைப் பெற்றுத் தருவது கல்வி என்பதால் அதன் முக்கியத்துவத்தைக் குழந்தைகளுக்கு உணர்த்திடும் நோக்கில் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள்,

“பள்ளமான இடத்தினைப்

பார்த்துப் பாயும் வெள்ளம் போல்

நல்ல நல்ல நூல்களை

நாடி நாமும் பயிலுவோம்"

என்ற பாடல் வாயிலாக நூல்கள் மனிதர்களுக்கு அறிவைத் தந்து வாழ்வில் உயர்ந்திட வழிகோலும் என்பதால் நல்ல நூல்களைத் தேடிதேடிப் படிக்க வேண்டும் என்று கற்றலில் ஆர்வத்தைத் தூண்டும் விதமான சிந்தனையை விதைக்கிறார் (Valliappa, 1967).

## கூடி வாழக் கோரிக்கை

கூடி வாழ்வதற்கு குறையாத அன்பும், நிறைவான பண்பும், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கும், வேற்றுமை நினையாத குணப்பாங்கும் வேண்டும் ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் தேவையானதும், சமுதாயத்தோடு இணக்கமாக வாழ்வதற்கு ஆதாரமானதும் ஒற்றுமை. அதற்கு அடிப்படை மனிதநேயமே என்பதனால் இவ்வுணர்வு சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் வேண்டுவதாகும். இதனையே வள்ளுவரும்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்"

என்ற குறளில் பிறப்பினால் அனைவரும் சமம் என்றும் செய்யும் தொழில் காட்டும் திறமையினால் மட்டுமே வேறுபாடு காண முடியும் என்றும் கூறுகின்றனர் (Parimelalhagar, 2002). இதனால் பிறப்பினால் உயர்வு தாழ்வு பார்ப்பது மூடத்தனம் என்பதை இவண் எடுத்தோதுகின்றார். சாதியினால் மனித வாழ்விற்கு எவ்விதச் சிறு பயனும் விளையப் போவதில்லை. அதனால் வீண் சண்டைகளும் குழப்பங்களும் மட்டுமே மேலோங்குகின்றன. அத்தகு சாதி மனிதர்களுக்குத் தேவையில்லை. அதனால் சாதிகள் பற்றிய சிந்தனையைச் சிறு வயதிலேயே குழந்தைகளிடம் அகற்றிட மகாகவி பாரதியாரும்,

"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்

தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்

நீதி உயர்ந்தமதி கல்வி - அன்பு

நிறைய வுடையோர் மேலோர்"

இவ்வுலகில் ஆறறிவு உயிரினங்களை வகைப்படுத்தி பிரிக்கத் தொடங்கி, இன்று சாதி, மதம், அந்தஸ்து எனப் பிரிவுகள் இருப்பது மன வேதனையை அளிக்கிறது (Bharathiyar, 2019). மேலே குறிப்பிட்ட பாடலில் சிறுவர்களிடம் சாதிகள் பற்றிய சிந்தனை கூடாது அதைச் சிறுவயதிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்று வலியுறுத்தும் வகையில் பாடலைப் படைத்து சாதிகளின் எதிர்ப்பை முதலில் சிறுவர்களிடம் தொடங்கினால் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் விரிசல்களைச் சமாளிக்க முடியும் என்கிறார். இதனை உணர்ந்த குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் குழந்தைப் பாடல் உத்தியில் ஒற்றுமையை மையப்படுத்தி அதனை வலியுறுத்தும் பாடல்களையும் இயற்றியுள்ளார். அதில்,

"அந்தியில் மலரும் அல்லியைக் காண

அன்புடன் வருவீர், தோழியரே

எந்தச் சமயமும் சோலையில் வந்தால்

இன்பம் பெறலாம், தோழியரே"

என்ற பாடலில் சோலையானது அனைவரின் மனத்தையும் ஒன்றிணைக்கும் (Valliappa, 1967). எனவே அதன் வாயிலாக அழகியலைப் பாதுகாக்கும் நோக்குடன் ஒற்றுமை உணர்வினையும் சேர்த்து

ஊட்டுகிறார். மேலும் சாதி, மத பேதங்கள் மட்டுமல்ல ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடுகளையும் நீக்கி அனைவரும் ஒன்று என்ற உணர்வினைக் குழந்தைகள் மனதில் பதிய வைத்திட,

“ஏழை யென்னும் எளியோ ரென்றும்

எண்ணங் கொண்டிடோம் - நாம்

இந்தி யர்கள் அனைவ ருக்கும்

சொந்த மாகிறோம்

நாளை இந்த நாட்டை நாமே

ஆளப் போகிறோம் - இன்றே

நல்ல முறையில் அடித்த ளத்தை

அமைத்துக் கொள்வோம்”

என்று கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் பாடல் இயற்றி ஒற்றுமை உணர்வுடன் செயல்பட்டால் நாளைய பாரதம் மேன்மையுறும் என்பதை குழந்தைகளுக்குப் புரியும் வகையில் திறம்பட விளக்கியுள்ளார் (Valliappa, 2010).

## நாட்டுப்பற்று

நாளைய சமுதாயத்தின் தூண்களாக வருங்காலத் தலைவர்களாக அறியப்படும் இன்றைய சிறுவர்கள், இளைஞர்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் மேம்பட்ட சமுதாயத்தை உலகத் தரத்தில் ஏற்படுத்த முடியும். அதற்கு அவர்கள் மனதில் நாட்டுப்பற்றினை ஊட்டுவது மிகமிக அவசியம் இதைக் கருத்தில் கொண்டு கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள்,

“இந்தியன் என்று சொல்லிக் கொள்வதில்

என்றும் பெருமை கொண்டிடுவேன்

இந்திய னாக இருந்திட நானும்

என்றும் முயற்சி செய்திடுவேன்,

இந்தியர் அனைவரும் ஒன்றென எண்ணி

என்றும் அன்பாய் நடந்திடுவேன்,

இந்திய நாட்டின் பெருமை உயர

இயன்றதை எல்லாம் செய்திடுவேன்”

என்ற பாடல் மூலம் இந்தியன் என்றாலே ஒற்றுமை உணர்வு நிறைந்தவர்கள். அதனால் இந்த நாட்டின் பெருமையை உயர்த்த தன்னால் முடிந்ததைச் செய்து ஒற்றுமை உணர்வுடன் விளங்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டுள்ளார் (Valliappa, 2010).

## அறச்செயலில் தூய்மை

தனி மனிதனையும், சமுதாயத்தையும் செந்நெறிப்படுத்தும் ஒழுக்க நெறியாக அறத்தைத் தமிழர் கருதினர். இம்மண்ணுலக வாழ்வு சிறப்பதற்கும், விண்ணுலகம் அடைவதற்கும் அறவாழ்வு இன்றியமையாதது என்ற எண்ணம் அவர்களுள் இருந்து வந்தது. பண்டைக் காலத்தில் சான்றோர்கள் தனிமனிதன் ஒருவன் சமுதாயத்திற்கும் தனக்கும் ஆற்ற வேண்டிய சில கடமைகளாக அமைத்த ஒழுக்க நெறிகளை… அறமாகக் கருதினர்.

அறத்தின் நோக்கம் என்பது பிறர் நலம் பேணல் என்பதாகும். ஒருவர் தம்மால் இயன்ற அளவு பிறர் துன்பத்தை நீக்க முயலுதலும், தம் எண்ணம், சொல், செயல் இவற்றால் பிறருக்கு நன்மையே நினைத்து, தீமையை முற்றிலுமாக அழித்தலும், பிறர் உயர்வில் பொறாமை கொள்ளாது இன்பம் காண்பதும், நல்வழிப்படுத்துவது ஆகும். இப்பண்பு சிறிது சிறிதாகக் குழந்தைகள் மனதில் பெருகும்போது தன்னலம் காணலும் சிறிது சிறிதாக நீங்கி விடும். அதனால் அறம் பற்றிய பாடல்களைக் குழந்தைக் கவிஞர்கள் வடித்தார்கள்.

"தருமம் செய்வ தாகக் கூறித்

தண்ணீர் பந்தல் வைப்பவர்

கிருமி நிறைந்த நீரை வழங்கின்

கெடுதல் அதிகம் ஆகுமே

அன்ன தானம் செய்வ தாக

அறிவித் தோர்கள், புழுவுடன்

மண்ணும் கல்லும் கலந்த சோற்றை

வழங்க லாமோ? சொல்லுவீர்"

என்ற பாடல் மூலம் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் அறம் செய்யத் தூய்மையும் அவசியமாகும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் (Valliappa, 1967). நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களிலும் தூய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என எச்சரித்துள்ளார். நாம் ஆற்றும் நற்செயல்கள் நமக்குச் சமுதாயத்தில் நன்மதிப்பைப் பெற்றுத்தரும் என்பதால் தவறானச் செயல்களுக்குத் துணை போகாது சுயம் காத்து தனித்து நின்றிட வேண்டும் என்ற நோக்கில் பல பாடல்களைக் குழந்தைகளுக்காக வடித்துள்ளார்.

## முடிவுரை

ஒரு குழந்தை சிசுவாகப் பிறந்ததிலிருந்து வளர்ந்து வாழ்ந்து மரணிக்கும் வரையில் அது வாழவேண்டிய வழியை அறம் வகுக்கின்றது. இது தனி அறமாக இருப்பினும் சரி பொது அறமாக இருப்பினும் சரி. இந்த அறத்தின் தண்டவாளத்தில் தான் வாழ்க்கை என்ற வண்டி ஓடவேண்டும் என்பது அடிப்படை. அறநெறி என்பது ஒரு மருந்து. அது பெருநலம் பயக்கக் கூடியது. அதை மருந்து கொடுக்கும் முறைப்படியே கொடுக்க வேண்டும். சிறிது வெல்லத்தை உருட்டி, அதற்குள் மருந்தை வைத்துக் கொடுப்பது போல அழகிய கதைகள், பாடல்கள் என்னும் இலக்கிய வெல்லத்தையும் உருட்டி அதனுள் அறவழிக் கருத்து என்னும் அருமருந்தையிட்டுக் கொடுக்கும் போது அவை பயன்தருவனவாக அமைகின்றன என்பதை அறிந்தே குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் தம் பாடல்கள் மூலம் குழந்தை உலகத்தை களிபேறுவகை அடையச் செய்துள்ளார்.

## References

Bharathiyar, (2019) Bharathiyar Kavithaigal, Tirumagal Nilayam, Chennai, India

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India

Perumal, T.P., (1972) Kavimaniyin Valvum Kavithai valamum, Vanathi Pathippagam, Chennai, India

Valliappa, A., (1967) Malarum Ullam, Kulandai Padalkal, Kulandai Puthaka Nilayam, Chennai, India

Valliappa, A., (2010) Sirikum Pookkal, Pary Station, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License